2013 ஏப்ரல் 30]

362—

தங்கும் விடுதி

***22233—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் அருள்மிகு நடராஜர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தங்கும் விடுதி அல்லது மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

சிதம்பரம் அருள்மிகு நடராஜர் திருக்கோயில் என்று அழைக்கப்படும் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் செயல் அலுவலரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. சிதம்பரம் பொது தீட்சிதர்களால் செயல் அலுவலர் நியமனத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், மேற்படி, திருக்கோயிலில் செயல் அலுவலர் எந்தவிதமான சீரமைப்புப் பணிகளோ, கட்டுமானப் பணிகளோ அல்லது இடிப்புப் பணியோ மேற்கொள்ளக்கூடாது என தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் புதிய கட்டுமானங்கள் கட்ட தடை ஆணை உள்ளதாலும், வழக்கு நிலுவையில் உள்ளதாலும், திருக்கோயிலில் புதிதாக எந்தவித கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. மேற்படி, வழக்கில் உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பு வரப்பெற்றவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான ஆலோசனைகளைப் பெற்று உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 30

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நடராஜர் ஆலயத்திற்கு அன்றாடம் மூவாயிரத்திலிருந்து நான்காயிரம் பக்தர்கள் வந்து செல்கிறார்கள். அப்படி வரக்கூடிய பக்தர்கள், ஓய்வு எடுக்கும் வசதிகளும், கழிப்பிட வசதிகளும் இல்லாமல் பெரிதும் சிரமப்படுகின்றனர். குறிப்பாக தாய்மார்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுடைய அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் வேறு பல இடங்களில் இருப்பதைப்போல, பக்தர்கள் வந்து தங்கி, ஓய்வெடுத்து, காலைக் கடன்களை முடித்துச் செல்வதற்கு அங்கே விடுதிகள் அல்லது மண்டபம் அமைத்து கொடுப்பது மிக மிக அத்தியாவசியத் தேவையாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால் கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கு தடை இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், நான் இங்கு கோரிக்கை வைத்திருப்பது கோயிலுக்கு உள்ளே இருக்கின்ற கட்டுமானப் பணிகளையோ, மண்டபமோ, விடுதியோ கட்டுவதற்கு அல்ல. கோயிலுக்கு வெளியில் இருக்கின்ற இடத்தில், சற்று தூரத்தில் இருக்கின்ற இடத்தில்தான் மக்கள் வந்து செல்ல வசதியாக இந்த விடுதியையும், மண்டபத்தையும் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன். எனவே, இதனை அருள்கூர்ந்து பரிசீலித்து அங்கு வரக்கூடிய பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசு இதனை நிறைவேற்றித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்கு அருகில் சுமார் ½ கி.மீ. தூரத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் அருள்மிகு தில்லை காளியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இந்தத் திருக்கோயில் சார்பாக சுமார் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் பயன்பாட்டிற்காக குளியலறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டுவதற்கும், திருக்கோயில் திருக்குளத்தினைச் சீரமைப்பதற்கும், சுற்றுச் சுவர் கட்டுவதற்கும் பணிகள், விரைவிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே

2013 ஏப்ரல் 30]

தொடங்கப்படவுள்ளன என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-55

மேலும், இத்திருக்கோயிலுக்கு அருகிலே அரை ஏக்கர் நிலமும் மற்றும் 5 சென்ட் நிலமும் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து, திருக்கோயில்களுக்கு வருகின்ற பக்தர்களுக்கெல்லாம் எந்த அளவுக்கு அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டுமோ அதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பித்திருக்கிறார்கள். அவற்றைக் கருத்தில் கொண்டு, பக்தர்கள் நலனைக் கருத்தில்கொண்டு, நிதியாதாரங்களையும் ஆராய்ந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, இந்த நிலத்தில் தங்கும் விடுதிகள் கட்ட பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தில்லை நடராஜர் ஆலயத்திற்கு அருகிலே இருக்கின்ற தில்லையம்மன் கோயிலிலே இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில், 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பக்தர்கள் வந்து தங்கிச் செல்வதற்கான ஓய்வறைகள், விடுதிகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்ததற்கு என்னுடைய சார்பிலேயும், அந்தப் பகுதி மக்களின் சார்பிலேயும் நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கினையும் விரைவிலே முடிவுக்கு கொண்டுவந்து, தில்லை நடராஜர் ஆலயத்திற்கு அருகிலேயே, வரக்கூடிய காலத்திலே, தங்கும் விடுதிகள் கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறிக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 363, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.